# Tamil Murli Quiz 19-09-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**ஆன்மீக வழிகாட்டியாகிய நீங்கள் அனைவருக்கும் ______________________ வழியை சொல்ல வேண்டும் .**

- **A.** வீட்டிற்கு செல்லும்
- **B.** அமரபுரிக்கான
- **C.** வைகுண்டத்திர்க்கான
- **D.** முக்திக்கான

**Q.2)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**குழந்தைகளாகிய உங்களுக்கு எந்த ஒரு போதை இருக்கிறது ?**

- **A.** பாபாவிடம் படித்து தேவதைகள் ஆகின்றோம் என்ற மகிழ்ச்சி
- **B.** சொர்கத்தின் இளவரசன் இளவரசி ஆகின்றோம் என்ற மகிழ்ச்சி
- **C.** பாபாவை நினைவு செய்து பல பிறவிகளுக்கு தூய்மை ஆகின்றோம் என்ற மகிழ்ச்சி
- **D.** 21 பிறவிகளுக்கு நோயற்றவர்களாக இருப்போம் என்ற மகிழ்ச்சி

**Q.3)** <u>சரியா? தவறா?:</u>
**நாடகத்தின் விதி ஒரு போதும் மாறாது. நாம் அனைவரும் சாந்தி தாமம் என்கின்ற அமரபுரிக்கு செல்லத்தான் வேண்டும்.**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.4)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**உங்களுக்குள்ள போதையின் ஆதாரத்தில் எந்த ஒரு நம்பிக்கையான வார்த்தையை பேசுகிறீர்கள்?**

- **A.** புதிய உலகின் ஸ்தாபனை மற்றும் பழைய உலகின் விநாசம் நடக்கத்தான் வேண்டும்
- **B.** நாம் சொர்கத்திற்கு போகத்தான் வேண்டும்
- **C.** அனைவருக்கும் சுகம், சாந்தி, சந்தோஷம் நிறைந்த வாழ்க்கை கிடைக்கத்தான் வேண்டும்
- **D.** மகா பாரத யுத்தம் நடக்கத்தான் வேண்டும்

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**இந்த சமயத்தில் நாம் _______________ ஆகியுள்ளோம் . மற்றவர்களையும் ஆக்குகின்றோம் .**

- **A.** சதோ பிரதானம்
- **B.** ஆன்மீக வழி காட்டிகளாக
- **C.** பாவனம்
- **D.** யோகிகள்

**Q.6)** <u>சரியா? தவறா? :</u>
**வெளியில் யார் பிச்சை எடுக்க அமர்ந்திருக்கிறார்களோ அவர்களுக்கு கொடுப்பது ஒன்றும் தானம் இல்லை. அவர்களுக்கு இது தான் தொழில் . ஏழைகளுக்கு தானம் அளிப்பவர்கள் நல்ல பதவி அடைகிறார்கள் .**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.7)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**இந்த உலகில் உள்ள அனைத்து துக்கமுமே _________________ தான் ஏற்படுகிறது.**

- **A.** காமத்தினால்
- **B.** பேராசையினால்
- **C.** 5-விகாரங்களினால்
- **D.** தேக அபிமானத்தினால்

*Q.8)* **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**ஆத்மாக்களாகிய நீங்கள் தந்தையை என் நினைவு செய்ய வேண்டும்?**

**A.** தூய்மையற்றவர்களாக இருப்பதினால்

**B.** சொர்கத்திற்கு செல்ல வேண்டும் , அதனால்

**C.** தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடைய வேண்டும் அதனால்

**D.** பதீத பாவானர் அவர் ஒருவர் தான், அதனால்

*Q.9)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**குமாரிகளுக்கும், அதர் குமாரிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று பாபா கூறுகிறார்?**

**A.** குமாரிகள் பிறவியிலிருந்தே தூய்மையானவர்கள், அதர் குமாரிகள் அப்படி இல்லை

**B.** குமாரிகள் திருமணம் செய்து கொள்வதில்லை, அதர் குமாரிகள் செய்து கொள்கிறார்கள்.

**C.** குமாரி தூய்மையாக இருக்கின்றார். அதர் குமாரி அபவித்ரமாகி பிறகு தூய்மையாக ஆகிறார்.

**D.** மேலே கூறிய அனைத்தும்

*Q.10)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**இந்த நாடகம் வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டே இருக்கிறது. ஆகையினால் ஒருபோதும் எந்த ஒரு காட்சியைப் பார்த்தும் _______________ போகக்கூடாது.**

**A.** துக்கம் அடைந்து

**B.** பயித்தியம் பிடித்து

**C.** மனமுடைந்து

**D.** அதன் பாதிப்பால் மூழ்கி